RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s81

# சூழலியப் பெண்ணிய நோக்கு: அள்ளூர் நன்முல்லையார் பாடல்களில் இயற்கையை எழுதுதலும் அக வெளிப்பாடும்

பி. பாலசுப்பிரமணியன் [அ, *]

[அ] தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்-635601, தமிழ்நாடு, இந்தியா.

# Ecological feminist perspective: Writing nature and internal expression in Allur Nanmullaiyar songs

P. Balasubramanian [a, *]

[a] PG Research Department of Tamil, Sacred Heart College (Autonomous), Tirupattur–635601, Tamil Nadu, India

* Corresponding Author: uyirneyan@gmail.com

Received: 03-05-2021
Revised: 30-04-2022
Accepted: 04-05-2022
Published: 26-06-2022

Check for updates

**ABSTRACT**

Nature is paramount in the history of mankind. Nature was close to human beings when they lived as an ethnic group in primitive society. Ethnic peoples lived in forests, mountains, land s, seas and arid lands. Here, the mother is given priority. The mother had a unique identity in this community. Mother lived in harmony with nature. She traveled across the land. There were no restrictions on homosexuality or male sexuality. She chose to live with men who were physically and mentally strong. Her choice is uncontrollable. It is possible that her land brought her closer to natural life. She was permanently housed when her mother became pregnant and had to stay in one place. Adam wandered the fields for food and engaged in the business of collecting food. She was made homeless by the presence of the woman. Immersed with nature, she brought natural food to the farmer who was in need of food near her place of residence. The prosperity of the crop brought happiness to the wanderer for food. He gave up the wave and snatched the crop from the woman. Thus the woman was alienated from nature. This is where we approach a female creator. There is a need to explore the natural expressions in the songs of the 41 female creators who sang Sangam poems. The article explores the co-occurrence of nature and intimacy in the songs of Allur Nanmullaiyar in the study.

**Keywords:** Ecology, Ecocriticism, Ecofeminism, Nature Writing, Internal expression, Fusion

## முன்னுரை

ஆதிப்பொதுவுடைமைச் சமூகத்திலிருந்த தாய்வழிச் சமுதாயம் தந்தை வழிச் சமுதாயமாக மாற்றமடைந்ததை வரலாறு, இலக்கிய வாசிப்பிலிருந்து அறிகிறோம். தந்தை வழிச் சமூகத்தில் பெண் விவசாயத் தொழிலிருந்து முற்றிலும் விலக்கப்படவில்லை. ஆண் தமது உடலுழைப்பைத் தாண்டி அதில் கிடைக்கும் பொருளாதாரத்தைக் கையகப்படுத்தியலிருந்து சிக்கல் உருவாகிறது. பெண் இயற்கையுடன் உறவாடி உழைத்துக் கொண்டேயிருக்கிறாள். இனக்குழுச் சமூக அமைப்பில் ஒரு சில நிலங்களில் வசித்த பெண்கள் மட்டும் பண்டமாற்ற முறையில் தமக்குத் தேவையானதைப் பூர்த்தி செய்து கொண்டனர். முல்லை நிலப் பெண் ஒருத்தி பால், மோர் விற்ற பணத்தில் தங்க அட்டிகை வாங்காமல் வீட்டின் செல்வத்தைப் பெருக்கும் மாடு வாங்குகிறாள். இங்கு பொருளாதாரம் என்பதைத்

தாண்டி அவள் விலங்குகளோடு அன்பாகிறாள். அவளிடம் விலங்குகளைக் குடும்ப உறுப்பினராகக் காணும் தன்மையை அவளிடமிருந்து உணர முடிகிறது.

சமகாலத்திலும் கிராமங்களில் பயிர்த்தொழில், வளமைக்குரியச் சடங்குகள் (முளைப்பாரி), பயிர் வளர்வதற்குரிய நாற்று நடுதல், களை பறித்தல், பயிர் நடுதல், மரம் நடல், வளர்த்தல், அறுவடை செய்தல் என அனைத்துப் பணிகளையும் பெண்களே செய்து வருகின்றனர். விவசாயப் பணிகளில் ஈடுபட நடந்தே பல ஊர்களுக்குப் பயணப்படுகிறார்கள். கூலி என்பதைத் தாண்டி மண்ணுக்கும் நிலத்துக்கும் பயிருக்குமான அவர்களது உறவு உழைப்பின் மூலம் பலப்படுவதை அறிகிறோம்.

இல்லத்தை இயற்கை சூழ அமைக்க வேண்டும் என்று விரும்புபவளும் இயற்கையை சார்ந்த இடங்களுக்கு விரும்பிப் பயணிப்பவளும் அவளே. பயணம் ஆணுக்கானது என்ற கருத்தியலும் உடைபட வேண்டும் என்று விரும்புவது பெண்ணியம்.

உற்பத்தியை உருவாக்கும் நிலம் வளமைக்குரியது. மகப்பேறுடைய பெண்ணும் வளமைக்குரியவள் என்ற ஒப்புமை இயற்கை சார்ந்த அறிவியல். விஞ்ஞான உலகத்தின் அடியொற்றி வளர்ந்த இயந்திரப் பெருக்கம் பெண்ணைப் பயிர்த்தொழிலிடமிருந்து விலக்கியது. இவ்வாறாகப் பெண்ணுக்கும் இயற்கைக்குமான உறவை ஒருவாறு புரிந்து கொள்ளலாம்.

தமிழில் ஆதிக்கவிதைகள் எனக் கொண்டாடப்படக்கூடிய தொகைநூற்பாடல்கள் உருவாக்கத்தில் 41 பெண்பாற் புலவர்கள் (அறிஞர்களிடையே எண்ணிக்கையில் கருத்து வேறுபாடுண்டு) அடங்குவர். ஆண் படைப்பாளர்களின் எண்ணிக்கையை விடப் பெண்பாற் புலவர்கள் குறைவாக இருந்தாலும் கவிதைகளில் தமது உடலை, அகத்தை, அகவாழ்வை இயற்கையையோடு பொருத்தி எழுதுவதில் கைதேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

ஆண் படைப்பாளர்கள் வியந்து பேசப்பட்ட அளவிற்குப் பெண் பாற் புலவர்கள் அடையாளப்படவில்லை. குறிப்பாக ஔவை, வெள்ளிவீதி, காக்கைப் பாடினியார் எனச் சிலர் மட்டுமே அறியப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அதனடிப்படையில் சூழலியல் பெண்ணிய நோக்கில் அள்ளூர் நன்முல்லையாரின் பாடல்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## அள்ளூர் நன்முல்லையார்

அள்ளூர் என்பது சிவகங்கை மாவட்டத்திலுள்ள அள்ளூர் என்னும் ஊரினைக் குறிக்கும் என்பர். முல்லை இவரது இயற்பெயர். நல் என்பது அடைமொழி. ஆர் என்னும் விகுதி புலமை சிறப்பு கருதி சேர்க்கப்பட்டிருக்கலாம். “புறநானூற்றில் இரண்டு பாடல்கள் (306,340), குறுந்தொகையில் ஒன்பது பாடல்கள் (32,67,68,93,96,140,157,202,237), அகநானூறு ஒரு பாடல் (46) எனப் பன்னிரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்” (Murugesapandian, 2008). அள்ளூர் வயல்கள் நிரம்பிய வளமான மருதநிலத்தைச் சார்ந்த ஊர் என்று குறிப்பிடுவர். நன்முல்லையார் மருத நிலம் மட்டுமல்லாது குறிஞ்சி, பாலை நிலம் குறித்தும் பாடியுள்ளார் என்பதும் கவனிக்கத்தக்கது.

## சூழலியப் பெண்ணியம்

இலக்கியத்திற்கும் இயற்கைக்குமான உறவுகள் குறித்த உரையாடல்கள் நீண்ட காலமாகப் பேசப்பட்டு வந்தாலும் இயற்கை - இலக்கியம் - பெண் ஆகியவற்றிற்கிடையேயான தொடர்புகள் குறித்த சொல்லாடல்கள் இரண்டாயிரத்திற்குப் பின்பு தீவிரமடைந்ததாகக் குறிப்பிடுவர். ஆரம்பத்தில் சூழலியம் என்ற கருத்தாக்கம் உருவானது. அதிலிருந்து சூழலியத் திறனாய்வு, சூழலியப் பெண்ணியம் என்ற கருத்தாக்கம், பார்வை விரிவடைந்தது எனலாம்.

“சூழலியப் பெண்ணியம் என்ற சொல்லை “தி போனே” (d’ Eaubonne) என்பவர் 1974 இல் அறிமுகம் செய்து வைத்ததைத் தொடர்ந்து, இந்தச் சொற்றொடர் ஃபிரான் சாய்ஸ் டி பார்னால் என்பவரால் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. அதன்பிறகு, 1980 களில் இது வளரத் தொடங்கியது.

சூசன் கிரிபியா (Susan Griffia) வின் "Reweaving The World: The Emergence of Eco Feminism என்ற நூலும் கால்டிகாட் மற்றும் லீலேண்டு (Caldecott and Leland) தொகுத்த Woman and Life of Earth: A Conference on Eco - Feminism In The Eighties" என்ற நூலும் சூழலியலை, பெண்களை மையமிட்டு விவாதிக்கக் காரணமாக அமைந்தன. மார்க்சியப் பெண்ணியம், கறுப்புப் பெண்ணியம், தலித்தியப் பெண்ணியம் போன்று சூழலியற் பெண்ணியம் என்ற கருத்தாக்கம் பரவ மேற்கண்ட நூல்கள் தளம் அமைத்தன எனலாம். ஏற்கனவே இருந்த பெண்ணியச் செயற்பாட்டாளர்கள் இதில் இணைந்து கொள்ள சூழலியப் பெண்ணியத்தின் கருத்தியல்கள் பலவாறாக விவாதிக்கப்பட்டு வருகின்றன" (Rathinakumar, 2016).

"சூழலியப் பெண்ணியம் சுற்றுச் சூழலுக்குத் தனது அர்ப்பணிப்பை உறுதி செய்கிறது. பெண்ணுக்கும் இயற்கைக்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது" என்று குறிப்பிடுவார் வின்சென்ட் (Vincent, 2019).

"சூழலியப் பெண்ணியம் நிலம் பற்றிய ஓர் ஆழமான நனவு நிலையையும் அதன் வளத்தையும் கட்டமைப்பையும் செயல்களையும் தன்மைகளையும் அனுமானித்துக் கொள்கிறது. கனிதரும் நிலத்திற்கும் குழந்தைபெறும் பெண்ணிற்கும் இடையில் நெருங்கிய ஆழமான உறவு இருக்கிறது" என்கிறார் வனத்து அந்தோணி (Vincent, 2019).

"உலக அரசியல் மற்றும் பொருளாதாரம் சார்ந்த சிந்தனைப் போக்கின் விளைவாகத்தான் சமூகச் சூழலியல், சூழலியல் பெண்ணியம் முதலிய கிளைகளும் சூழலியல் திறனாய்வில் தோன்றியுள்ளன. சுற்றுச்சூழல் மாசுபடும் பொழுது பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகிற பாலினம் பெண்கள்தான் என்கிற பார்வையிலிருந்து சூழலியல் பெண்ணியம் உருவாகிறது. மறுஉற்பத்தியில் பெரிதும் பங்களிப்பு செய்கிற தாய்மைதான் சுற்றுச்சூழல் கேட்டிற்கு முதல் பலியாகிறது. மேலும் சுற்றுச்சூழல் கேட்டினால் பஞ்சம், பட்டினி, வேலையின்மை என வறுமை பரவும் போதும் பெரிதும் பாதிப்பிற்குள்ளாவது பெண்ணினம்தான். புயல், சுனாமி, எரிமலை முதலிய இயற்கைச் சீற்றத்தின் போதும் பேரழிவிற்கு உள்ளாவது பெண்கள்தான். இத்தகைய நோக்கில் சூழலியல் பெண்ணியம் தனக்கான திட்ட வரையறைகளை வகுத்துக் கொண்டு அதற்கேற்ப இலக்கியக் கல்வியை அணுக முயல்கிறது" என்கிறார் க. பஞ்சாங்கம் (Panjaangam, 2012).

"மவுன வசந்தம்" நூல் எழுதிய ராய்சல் கார்சன், "Unbent" எழுதிய, நோபல் பரிசு பெற்ற வங்காரி மாத்தாய், காயத்ரி ஸ்பைவக், அருந்ததிராய், மகாஸ்வேதாதேவி, வந்தனாசிவா, மேதாபட்கர், மயிலம்மா, ஜானு, மாலதிமைத்ரி, சின்னப்பிள்ளை போன்றோர் சூழலியப் பெண்ணிய எழுத்தாளர்களாகக் கருதப்படுகின்றனர்.

"தமிழ் இலக்கியத்தில் சூழலியப் பெண்ணியம்" குறித்து ஆய்ந்தவர் பேராசிரியர் வனத்து அந்தோணி ஆவார். 'Eco Feminist Discourse in Tamil' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள இந்த நூல் தமிழ் மொழிபெயர்ப்பில் இல்லை. இவர் தமது நூலில் சங்கக் கவிதைகள், அற இலக்கியங்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் வரை சூழலியப் பெண்ணியத்தைத் தத்துவார்த்தமாக அணுகி தமிழ் இலக்கியத்தில் அது எப்படி வெளிப்படுகிறது என்பதைக் காட்டுகிறார். இதற்குப் பின்னுள்ள இலக்கியங்கள் குறித்த ஆய்வு குறைவு எனலாம்.

சூழலியப் பெண்ணியம் என்ற கருத்தாக்கம் மேலை நாடுகளில் இருந்து உருவாக்கப்பட்டாலும் நமக்குச் சூழலியப் பெண்ணியக் கருத்தியலை வழங்குபவர்கள் சங்கப் பெண்பாற் கவிஞர்களாவர்.

## சூழலியப் பெண்ணியப் பார்வைகள்

- தாய்மைதான் சூழல்கேட்டின் முதல் பலியாகக் கருதப்படுகிறது.
- இயற்கைப் பேரழிவுகளில் அதிகம் பாதிப்பிற்குள்ளாவது பெண்கள்.
- புவியை ஆள்பவன் ஆண். அவன் இயற்கையின் மீது அதிகாரம் செலுத்துவதோடு அவற்றை அதிகமாக நுகர்பவனாக மட்டுமல்ல அழிப்பவனாகவும் இருக்கிறான்.

- பெண்விடுதலையை இயற்கையைத் தவிர்த்துவிட்டுப் பேசமுடியாது. ஆண்களை விடப் பெண்களுக்கு இயற்கையோடு நெருங்கியத் தொடர்பு இருக்கிறது.
- சூழலியல் திறனாய்வு ஆணியப் பார்வை வயப்பட்டது. சூழலியப் பெண்ணியப் பார்வை பெண்ணியப் பார்வை வயப்பட்டது என்கின்றனர் சூழலியப் பெண்ணியவாதிகள்.
- புவிக்கும் பெண்ணுக்குமான விடுதலை என்பது ஆண்களிடமிருந்து தொடங்க வேண்டும். ஆண்கள் கைப்பற்றிக் கொண்ட புவிக்கு விடுதலை அளிக்க வேண்டுமானால் வனங்கள், ஆறுகள், மலைகள், பறவைகள், விலங்குகள் என அனைத்தையும் அவனிடமிருந்து விடுவிக்க வேண்டும். இவை சாத்தியப்பட சூழலியற் பெண்ணியத்தை அரசியல் கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என்பர் சூழலியப் பெண்ணியவாதிகள்.

இவ்வாறான பெண்ணியப் பார்வைகளின் அடிப்படையில் சூழலியலை ஆராயலாம்.

## இயற்கை - உடல் - உள்ளம்

நன்முல்லையார் தாம் பாடிய 12 பாடல்களில் 11 பாடல்கள் இயற்கையையும் அகத்தையும் இணைத்துப் பேசுவதாகப் புரிந்து கொள்ளலாம். குறுந்தொகையில் இடம்பெறும் 32 ஆவது பாடல் குறிஞ்சித் திணை பற்றிப் பேசுகிறது. இது தலைவன் கூற்றுப் பாடல். பாடியவர் பெண்பாற் புலவர். சங்க இலக்கியத்தில் ஆண் புலவர்கள் பெண்கூற்றுப் பாடல்களைப் பாடுவதும் பெண்பாற் புலவர்கள் ஆண்கூற்றுப் பாடல்களை அமைத்துப் பாடுவதும் சிறப்பிற்குரியதாகும். ஒரு பெண் ஆண் மன நிலை கொண்டு பாடல் இயற்றுவதும் ஓர் ஆண் பெண்மனநிலை கொண்டு பாடல் இயற்றுவதும் முரணாக உள்ளது என்பதையும் தாண்டிப் பல செய்திகளை இதற்குள் ஆராய வேண்டியிருக்கிறது.

காமம் காலை, பகல், மாலை, யாமம், விடியல் என்ற இயற்கைப் பொழுதுகளோடு ஒப்பிட்டுப் பாடப்படுகிறது. பொழுதைக் கருத்தில் கொண்டு காமத்தைப் பார்க்கக்கூடாது அது பொய்யாகிவிடும். இன்பம் கிட்டாமல் பிரிவு நேரிடுகிற போது, பனைமடலில் குதிரை செய்து மடலேறினால் தலைவிக்குப் பழி வரும். அவ்வாறாக நான் அவலத்தில் உயிர் வாழ்ந்தால் எனக்குப் பழி என்று தலைவன் கூறுவதாகப் பாடல் இயற்றப்பட்டுள்ளது.

“காலையும் பகலும் கையறு மாலையும்

ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்

பொழுதிடை தெரியின் பொய்யே காமம்

மாஎன மடலொடு மறுகில் தோன்றித்

தெற்றெனத் தூற்றலும் பழியே

வாழ்தலும் பழியே பிரிவு தலைவரினே”

என்ற பாடலில் ஐந்து பொழுதுகளோடு காமத்தை ஒப்பிட்டுப் பேசுதலையும் பனைமடலில் குதிரை செய்தலையும் காண முடிகிறது (Somasundaranar, 2007). இது இயற்கை குறித்த பதிவுகளாகும்.

“உள்ளார்கொல்லோ தோழி! கிள்ளை

வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்”

என்ற பாடல் கிளி தமது வளைந்த மூக்கில் கொண்ட ஒள்ளிய வேப்பம்பழம் அணிகலனில் புதிய நூல் கோப்பவரின் கைநகத்தில் படிந்திருக்கும் பொற்காசு போன்றிருக்கும் என்ற உவமை சூழல் வாழ்வை முன்னிறுத்துகிறது (Somasundaranar, 2007).

குறும்பூழ்ப் பறவையின் கால் போன்ற செம்மையான தாள் கொண்ட உழுந்தின் முற்றிய காய்களை, மான்கள் தின்னும் பொருட்டுக் கவர்ந்து செல்லும் அரிய பனிபடரும் முன்பனிக் காலத்தால் உண்டாகும் துன்பம் போக்கும் மருந்து தலைவனின் மார்பு என்கிறாள்.

“பூழ்க்கால் அன்ன செங்கால் உழுந்தின்

ஊழ்ப்படு முதுகாய் உழையினம் கவரும்

அரும்பனி அற்சிரம் தீர்க்கும்

மருந்து பிறிது இல்லை அவர்மணந்த மார்பே”

என்ற பாடலில் முன்பனிக்காலத்தை (இயற்கையை) தனக்கு ஏற்படும் காதல் துன்பத்தோடு பொருத்திப் பார்க்கும் தன்மையை அறிய முடிகிறது (Somasundaranar, 2007).

வேறு ஒரு பாடலில் தலைவனை அறிமுகம் செய்கிறபோது அருவியின் அருகில் வளர்ந்த வேங்கை மரங்களுடைய மலைநாட்டுத் தலைவன் என்பதை,

“அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு

யான்எவன் செய்கோ? என்றி யான் அது

நகை என உணரேன் ஆயின்

என்ஆ குவைகொல் நன்னுதல் நீயே”

என்ற பாடல் குறிப்பிடுகிறது (Somasundaranar, 2007). பெரும்பாலான பாடல்கள் தலைவனை, தலைவியை அறிமுகப்படுத்துகிற போது அவர்களது நிலம்சார் கருப்பொருளையும் குறிப்பிடுவது சங்கக் கவிதை மரபாக இருப்பதைக் காண முடிகிறது.

“வேதின வெரிநின் ஓதிமுது போத்து

ஆறுசெல் மாக்கள் புள்கொளப் பொருந்தும்

சுரனே சென்றனர்”

என்ற பாடல் கருக்கரிவாள் போன்ற முதுகையுடைய முதிய ஆண் ஓந்தியானது, வழிப்போக்கர் நிமித்தமாக வறண்ட பாலை நிலத்தில் தங்கியிருக்கும் என்பதைக் குறிப்பிடுகிறது (Somasundaranar, 2007).

குக்கூ என்று கோழி கூவியதால் எனது தோள்சாய்ந்திருக்கின்ற காதலரைப் பிரிக்கும் கூர்வாள் போல வைகறைப் பொழுது வந்தது என்றும் இதனால் எனது தூய நெஞ்சம் அவனைப் பிரிந்து வாடும் என்கிறாள் தலைவி.

“குக்கூ என்றது கோழி அதன்எதிர்

துட்கென் றன்று என்தூஉ நெஞ்சம்

தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்

வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே”

என்ற பாடல்வழி வாள்போல் வந்த வைகறைப் பொழுதைத் தமது பிரிவுத் துன்பத்தோடு ஒப்பிட்டுப் பேசுவதை அறிய முடிகிறது (Somasundaranar, 2007).

முல்லை நிலத்தில் நெருங்கி முளைத்திருக்கின்ற சிறிய இலைகளை உடைய நெருஞ்சி மலர்கள் பார்ப்பதற்கு அழகாக இனிய தோற்றமுடையதாக இருந்தாலும் அதனை நெருங்குபவர்களுக்குத் துன்பத்தைத் தரக்கூடிய முட்களைக் கொண்டிருக்கும். அதுபோலவே முன்பெல்லாம் இனிய செயல்களை மட்டுமே செய்த என் காதலன் இப்போது துன்பம் செய்தான். இதை நினைத்து எனது நெஞ்சம் வருந்துகிறது தோழி என்கிறாள் தலைவி. இதனை,

“நோம்என் நெஞ்சே! நோம் என் நெஞ்சே!

புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்

கட்கு இன் புதுமலர் முட்பயந்தா அங்கு

இனிய செய்தநம் காதலர்

இன்னா செய்தல் நோம் என் நெஞ்சே!”

என்ற குறுந்தொகைப் பாடல் வெளிப்படுத்துகிறது. நெருஞ்சி மலரையும் முள்ளையும் தலைவனின் செயலோடு தொடர்புபடுத்துவதைக் காண முடிகிறது (Somasundaranar, 2007).

“மாக்கடல் திரையின் முழங்கி வலன்ஏர்பு

கோட்புலி வழங்கும் சோலை

எனைத்துஎன்று எண்ணுகோ முயக்கிடை மலைவே?”

என்ற பாடல் தலைவியின் தனிமைத்துயரைப் பிரிவின் இடைவெளியைப் போக்க, கடலின் அலைபோல் ஆர்ப்பரித்து வலப்பக்கம் பாய்ந்து கொல்லும் புலிகள் நடமாடும் காடுகளை எண்ணுவேன் எனக் குறிப்பிடுகிறான் (Somasundaranar, 2007). பிரிவுத்துயர் மறக்க விரைந்து செல்கிறபோது, காடுகளை எண்ணிக்கொண்டே தலைவன் பயணிக்கிறான். நெஞ்சம் விரைதலைக் காட்டுடன் பொருத்திப் பேசும் விதம் குறிப்பிடத்தக்கது.

தலைவனின் வளமான ஊரை அடையாளப்படுத்தி அவனது செயலை எருமையின் செயல்பாட்டோடு பொருத்தி உள்ளுறையாகப் பாடிய கவிதையையும் பார்க்க முடிகிறது.

“சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்

ஊர்மடி கங்குலில் நோன்தளை பரிந்து

கூர்முள் வேலி கோட்டின் நீக்கி

நீர்முதிர் பழனத்து மீன்உடல் இரிய

அம்தூம்பு வள்ளை மயக்கி தாமரை

வண்டுஊது பனிமலர் ஆரும் ஊர!”

என்ற பாடல், தொழுவத்திலிருக்கும் சேற்றுத் தரையில் நிற்பதைப் பொறுக்காத சிவந்த கண்களை உடைய எருமை, ஊரார் உறங்கும் நள்ளிரவில் வலிய கயிற்றை அறுத்துக் கொண்டு போய்க் கூர்மையான முள்ளையுடைய வேலியைத் தன் கொம்பால் அகற்றிவிட்டு, நீர் மிகுந்த வயலில் மீன்கள் எல்லாம் அஞ்சி ஓடுமாறு இறங்கி, அங்குள்ள வள்ளைக்கொடிகளை நிலைகுலையச் செய்து, வண்டுகள் உள்ளிருந்து ஊதும் தாமரையின் குளிர்ந்த மலரைத் தின்னும் வளமான ஊரைச் சார்ந்தவனே! என எருமையின் செயலையும் தலைவன் பரத்தை வீட்டிற்குச் சென்று திரும்பி என்னிடம் வந்திருக்கிறான் என்ற அவனது தகாத செயலையும் ஒப்பீட்டுப் பேசுவதாக அமைந்திருக்கிறது Venkatasami Nattar & Venakadachalam Pillai, 2009).

“களிறுபொரக் கலங்கு கழன்முள்வேலி

அரிதுஉண் கூவல் அம்குடிச் சீறூர்”

என்ற பாடலில் ஆண் யானைகள் கலக்கியதனால் சேறானதான, குடிநீர் அரிதாகிய நீர்நிலையும் முள்வேலி சூழ்ந்த அழகிய குடிகளை உடைய சிற்றூரில் வாழும் தலைவி என அடையாளப்படுத்துவது கவனத்திற்குரியதாகும் (Duraisamy Pillai, 2009).

ஊரை அறிமுகம் செய்கிறபோது, அது சார்ந்த இயற்கை சூழலையும் அதன் பின்புலத்தையும் அடையாளப்படுத்துவது சங்கக் கவிதைகளின் தனித்துவப் பண்பாக இருக்கிறது எனலாம்.

“இரும்பனை அன்ன பெருங்கை யானை

கரந்தைஅம் செறுவின் பெயர்க்கும்

பெருந்தகை மன்னர்க்கு வரைந்திருந் தனனே”

என்ற பாடலடிகள் தலைவியின் தந்தை பனை போன்ற துதிக்கை உடைய யானைப்படையைத் தனியனாகக் கரந்தை வயலில் வென்ற பெருந்தகையாகிய மன்னருக்கு இவளை மனம் பேசி உள்ளான் எனப் பதிவிடுவதும் குறிப்பிடத்தக்கதாகும். பனைமரம் சூழ்ந்து வாழ்ந்ததால் யானையின் துதிக்கைக்குப் பனையை ஒப்பிடுவதைக் கவனிக்க முடிகிறது (Duraisamy Pillai, 2009).

## அள்ளூர் நன்முல்லையாரின் இயற்கைசார் பதிவுகள்

நன்முல்லையார் படைத்த பன்னிரண்டு பாடல்கள் வெவ்வேறு நிலம் சார்ந்து பல்வேறு சூழ்நிலைகளில் பாடப்பட்டவைகளாகும். இவர் திட்டமிட்டு இயற்கை நிகழ்வுகளைப் பாடல்களில் பதிய வைக்க வேண்டும் என்று ஒருபோதும் கருதியிருக்கமாட்டார். அவரது ஆழ்மனத்தின் வெளிப்பாடாக இயற்கையோடு படைப்பும் சேர்ந்து விடுகிறது. அதனடிப்படையில் நன்முல்லையார் பாடல்களில் பலவிதமான இயற்கைசார்ந்த பதிவுகளைக் காணமுடிகிறது.

பொழுதுகள் : காலை, பகல், மாலை, யாமம், விடியல், வைகறை, பனிப்பொழுது.

மரம் : பனை, வேங்கை, வேப்பமரம்

விலங்குகள் : குதிரை, மான், எருமை, யானை, புலி

பறவை : கிளி, குறும்பூழ்ப்பறவை, கோழி, வண்டு

ஊர்வன : ஓந்தி

மலர் : நெருஞ்சி, தாமரை

முள் : நெருஞ்சி முள், முள் வேலி

நீர்உயிரினம் : மீன்

பயிரினம் : உளுந்து

கொடி : வள்ளைக்கொடிகள்

நீர் : நீர்நிலை, கடலலை, அருவி

காய் : முதுகாய்

மலை : பெருமலை

காடு : வறண்ட கள்ளிக்காடு

நிலம் & திணை: குறிஞ்சி, மருதம், பாலை (அகம்), வாகை (மூதின்முல்லை), காஞ்சி (மகட்பாற்காஞ்சி) (புறம்)

ஆண்பாற் புலவர்களின் பாடல்களில் இயற்கை குறித்தப் பதிவுகளை ஆய்வு செய்தால் இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளை அறியலாம்.

## முடிவுரை

சங்கக் கவிதைகள் தமிழரின் தொல் அடையாளம் தாண்டி அறிவுசார் மரபின் உச்சம் எனலாம். இந்தச் சாதனை மரபில் அதிகக் கவனம் பெற்றது தந்தை வழிச் சமூக மரபே ஆகும். ஆண்களின் அடையாளம் என்று கூடச் சங்க இலக்கியத்தைச் சொல்லலாம். கபிலர், பரணர் விதந்து பேசப்பட்ட அளவிற்குப் பெண்படைப்பாளிகள் பேசப்படவில்லை. ஔவையார், வெள்ளிவீதியார் மட்டுமே சிறிது பேசப்பட்டிருக்கிறார்கள். அள்ளூர் நன்முல்லையார் போன்ற இன்னும் பல கவிஞர்கள் பேசப்படவில்லை. பெரும்பாலான பெண் கவிஞர்கள் விலக்கி வைக்கப்பட்டனர். சங்கப் பெண் கவிதைகளில் போர்

எதிர்ப்புக் குரல், பாலியல் அரசியல், ஆண்களின் அமைப்பை மறுக்கும் போக்கு காணப்படுகிறது. இதனடிப்படையில் சூழலியப் பெண்ணியத்தைச் சங்கக் கவிதைகளில் பொருத்திப் பார்த்து ஆய்வு செய்ய இடமிருக்கிறது. நன்முல்லையாரின் ஒவ்வொரு பாடலிலும் இயற்கை பற்றிய பதிவுகள் உள்ளன. படைப்பாளியால் இதைத் தவிர்க்க முடியவில்லை. ஆண் படைப்பாளிகளிடம் இயற்கைசார் பதிவுகள் அமைந்துள்ள விதம் குறித்து ஆய்வு நிகழ்த்தப்பட வேண்டும். இயற்கையைத் தமக்கு நெருக்கமாக உடல், மனம் சார் நிகழ்வுகளோடு பொருத்திப் பாடும் தன்மை சிறப்பிற்குரியதாகும். படைப்பாளியின் காலத்தில் இயற்கை மனிதர்களுக்கு நெருக்கமாக இருந்ததால்தான் இப்படிப் பாடியிருக்க முடியும் என்று கருத இடமிருக்கிறது. சில பாடல்களில் அந்தந்த நிலம் சார் கருப்பொருட்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெண் படைப்பாளிகள் தமது கவிதைகளில் இயற்கையோடு இயைந்து நெருக்கமாகப் பாடியிருப்பதைக் கொண்டு ஒட்டு மொத்தப் பெண்படைப்பாளர்களின் படைப்புகள் குறித்துப் பகுப்பாய்வு செய்யலாம். இயற்கையையும் பெண்ணையும் கட்டுக்குள் கொண்டுவர நினைக்கும் ஆணாதிக்கச் சமூகத்திற்கெதிராகப் பெண்கள் தமது படைப்புகளின் வழியே இயற்கையை தாம் வாழும் நிலவியலை மண்ணோடும் வேரோடும் பதிவு செய்ய வேண்டியத் தேவையிருக்கிறது. சூழலியப் பெண்ணியத் திறனாய்வுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு சங்கப் பெண்கவிதைகள், ஆண்டாள், காரைக்காலம்மையார், சமகாலப் பெண்படைப்பாளிகளின் தன்வரலாற்று நூல்கள், கவிதைகள், புனைகதை இலக்கியங்களை ஆராயலாம். குறிப்பாகச் சமகாலத்தில் சூழலியப் பெண்ணியம் மிக முக்கிய அவசியமான ஆய்வாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

## References


Duraisamy Pillai, A.S., (1996) Purananooru Moolamum Uraiyum, South India Saiva Siddhanta Works Publishing Society, Thirunalveli, India

Murugesapandian, N., (2008) Atrai Thingal Avvennilavil, New Century Book House P Ltd., Chennai, India

Panjaangam, K., (2012) Ilakkiyamum Thiranaaivuk Kotpaadugalum, Annam–Agaram Publication, Thanjavur, India

Rathinakumar, N., (2016) Thiranaaivu kotpaadugalum panmuga vaasippugalum, kayal kavin, Chennai, India

Somasundaranar, P.V., (2007) Kurunthogai, South India Saiva Siddhanta Works Publishing Society, Thirunalveli, India

Venkatasami Nattar, N.M., Venakadachalam Pillai, R., (2009) Akananooru Moolamum Uraiyum, South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India

Vincent, S., (2019) Thiranaaivu Kotpaatalarkalum Kotpaadukalum, Pirazh Veliyeedu Madurai, India



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License